வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் நாராயணசாமி

தேதி 9.12.2025 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

கலாச்சாரத்துடன் மக்களை ஒருங்கிணைப்பதே, கலைகள் தான் என்று குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார்.

நாட்டில், வலுவான **விமான போக்குவரத்துக் கட்டமைப்பு** ஒன்றை உருவாக்க அரசு உறுதி பூண்டுள்ளதாக, மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் திரு ராம் மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் மொத்தம் உள்ள 51 கோடி வாக்காளர்களில், 99.97 சதவிகிதம் பேருக்கு **எஸ்ஐஆர் படிவங்கள்** வழங்கப்பட்டுள்ளதாக, தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் **துணிவும், தெளிவும்**, இன்றைய இளைஞர்களுக்கு முக்கியமாக தேவை என்று, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கூறி உள்ளார்.

*விருது*

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, புதுடெல்லியில் இன்று நடைபெற்ற விழாவில், 2023 மற்றும் 24-ஆம் ஆண்டிற்கான தேசிய கைவினை விருதுகளை வழங்கி சிறப்பித்தார். கலாச்சாரத்துடன் மக்களை ஒருங்கிணைப்பதே கலைகள் தான் என்றும், குறிப்பாக கைவினைக் கலைகள், கலாச்சாரத்தின் அடையாளமாக மட்டுமின்றி மக்களின் வாழ்வாதாரமாகவும் திகழ்வது சிறப்பு என்றும் அவர் கூறினார். நாடு முழுவதும், பெரும்பாலும் கிராமப் பகுதிகளைச் சேர்ந்த 32 லட்சம் பேர்,

கைவினைக் கலைகளால் வேலை வாய்ப்பு பெறுவதாக அவர் தெரிவித்தார். இதில் சுமார் 68 சதவிகிதம் பேர் பெண்கள் என்றும், அவர் கூறினார். இன்றைய தினம் விருது பெற்ற கைவினைக் கலைஞர்களில் 20 பேர் பெண்கள் என்பது குறித்தும் குடியரசு தலைவர் மகிழ்ச்சி வெளியிட்டார். மத்திய ஜவுளித் துறை அமைச்சர் திரு கிரிராஜ் சிங், விழாவில் பேசுகையில், கைவினை பொருட்கள் மீதான 18 சதவிகித ஜிஎஸ்டி, 5 சதவிகிதமாக குறைக்கப்பட்டதால், இத்துறையினர் பயன் பெறுவதுடன், இந்தியாவின் கிராமப்புற கைவினைப் பொருட்கள் உலக சந்தையை எட்டி இருப்பதாக கூறினார். 2030-31-ஆம் ஆண்டிற்குள், இந்திய கைவினைப் பொருட்களின் ஏற்றுமதியை, 1 லட்சம் கோடி ரூபாயாக உயர்த்தும் இலக்குடன் அரசு செயல்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

விழாவின் போது 2023-ஆம் ஆண்டிற்கான **ஷில்ப குரு** விருது மேற்கு வங்கத்தைச் சேர்ந்த **அஜித்குமார் தாஸ்** உள்ளிட்டவர்களுக்கும், 2024-ஆம் ஆண்டிற்கான **ஷில்ப** குரு விருது, ஹரியானாவைச் சேர்ந்த **ஹீராபாய் பகேல்** உள்ளிட்டவர்களுக்கும் வழங்கப்பட்டது. இன்றைய தினம் தேசிய விருது பெற்ற கைவினைக் கலைஞர்களில் தமிழகத்தைச் சேர்ந்த **ராதாகிருஷ்ண பிள்ளை, பாஸ்கரன்** ஆகியோரும், புதுச்சேரியைச் சேர்ந்த **காகிதக் கூழ் பொம்மைக் கலைஞர் மோகன்தாஸ்** ஆகியோர் அடங்குவர்.

*இண்டிகோ-லோக்சபா*

நாட்டில், வலுவான விமான போக்குவரத்து கட்டமைப்பு ஒன்றை உருவாக்க அரசு உறுதி பூண்டுள்ளதாக, மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் திரு ராம் மோகன் நாயுடு கூறி உள்ளார். இண்டிகோ விமான சேவை நிறுவனத்தின் செயல்பாடுகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடி குறித்து இன்று மக்களவையில், அவர் பேசுகையில் இந்த நெருக்கடி தற்போது வேகமாக ஸ்திரம் அடைந்து வருவதாகவும் நிலவரங்கள் சீராகும் வரை அரசு முற்றிலும் விழிப்பாக இருக்கும் என்றும் கூறினார். சிவில் விமான போக்குவரத்து தலைமை இயக்குநர் அலுவலகம் இண்டிகோ நிறுவனத்திற்கு நோட்டீஸ் அனுப்பி இருப்பதாகவும், அதன் அறிக்கை அடிப்படையில் கடுத்தமான முறையில், உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். அமைச்சரின் உரை குறித்து கூடுதல் விவரங்கள் ........

(வாய்ஸ்)

இந்தியாவின் விமான போக்குவரத்து துறையை, பயணிகளை மையமாகக் கொண்டதாக மாற்றுவதே அரசின் நீண்டகால குறிக்கோள் என்று அமைச்சர் திரு ராம் மோகன் நாயுடு மக்களவையில் கூறினார். இண்டிகோ நிறுவனத்தின் விமான சேவைகள் பாதிக்கப்பட்டதற்கு, அகநிலை பணி ஒதுக்கீட்டு பிரச்சனைகளே காரணம் என்று அவர் தெரிவித்தார். விமான ஓட்டிகளின் ஓய்வு நேரத்தை அதிகரிக்கும் வகையில் புதிய விதிமுறைகள் கொண்டு வரப்பட்டதற்கு, பயணிகளின் பாதுகாப்பில் அரசுக்குள்ள அக்கறையே காரணம் என்றும், விதிமுறைகளை முற்றிலுமான பின்பற்ற இண்டிகோ நிறுவனம் உறுதி அளித்திருப்பதாகவும் அவர் கூறினார். பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு சுமார் 750 கோடி ரூபாய் கட்டணம் ஏற்கனவே திருப்பி அளிக்கப்பட்டு, கூடுதல் கட்டணமின்றி மறுபதிவு வழங்கப் பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். இண்டிகோ நிறுவனம், பிரச்சனைக்கு முழு பொறுப்பு ஏற்பதை அரசு உறுதிப்படுத்தும் என்றும், எவ்வளவு பெரிய நிறுவனமாக இருந்தாலும், விதிமுறைகளுக்கு இணங்காமல் பயணிகளுக்கு சிரமம் ஏற்படுத்தினால் அனுமதிக்கப்பட மாட்டாது என்றும் அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு மேலும் கூறினார்.

இதற்கிடையே, இண்டிகோ நிறுவனத்தின் விமான சேவைகளுக்கான கால அட்டவணையில், 5 சதவிகித விமானங்களைக் குறைக்கவும், மூத்த அதிகாரிகள் விமான நிலையங்களுக்கு நேரில் சென்று பயணிகளுக்கான சேவைகளை உறுதிப்படுத்தவும், சிவில் விமான போக்குவரத்து தலைமை இயக்குநர் அலுவலகம் உத்தரவிட்டுள்ளது.

வந்தே மாதரம்

மக்களிடையே தேசப்பற்று மற்றும் தியாக உணர்வைத் தூண்டி விடுதலைப் போராட்டத்திற்கு வித்திட்டதே வந்தே மாதரம் பாடல் தான் என்று, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா கூறி உள்ளார். இன்று மாநிலங்களவையில் வந்தே மாதரம் தேச பக்தி பாடலின் 150-ஆம் ஆண்டு பற்றிய விவாதங்களைத் தொடக்கி வைத்துப் பேசிய அவர் நடப்புக் காலத்தில் மட்டுமின்றி, 2047-ல் முன்னேறிய நாடாக இந்தியா மேம்பட்ட பின்னரும், இப்பாடலின் தேவை நீடிக்கும் என்றார். வந்தே மாதரம் தேச

பக்தி பாடலின் முக்கியதுவத்தை இன்றைய இளைஞர்கள் உணர்ந்து கொள்ள, நாடாளுமன்ற விவாதங்கள் உதவி கரமாக இருக்கும் என்றும் அவர் கூறினார். மாநிலங்களவை எதிர்கட்சித் தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, விவாதங்களில் பங்கேற்றுப் பேசுகையில் காங்கிரஸ் கட்சி தான் விடுதலைப் போராட்ட காலத்தில், வந்தே மாதரம் பாடலை விடுதலையின் முழக்கமாக, மாற்றியதாக கூறினார்.

*எஸ் ஐ ஆர்-நாடு*

12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் மொத்தம் உள்ள 51 கோடி வாக்காளர்களில், இதுவரை 50.99 கோடி பேருக்கு எஸ்ஐஆர் படிவங்கள் வழங்கப் பட்டுள்ளதாகவும் சதவிகித அளவில் இது 99.97 சதவிகிதம் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. இதில் சுமார் 50 கோடி படிவங்களின் தரவுகள் டிஜிட்டல் வடிவத்திற்கு மாற்றப் பட்டுள்ளதாகவும், இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் ஆணையம் தெரிவித்துள்ளது. கேரளா அல்லாத இதர 11 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில், பூர்த்தி செய்யப்பட்ட எஸ்ஐஆர் படிவங்களை வரும் 11-ஆம் தேதி வரை வாக்காளர்கள் சமர்ப்பிக்கலாம். கேரளத்தில் மட்டும் வரும் 18-ஆம் தேதி கடைசி நாளாக இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

*புதுச்சேரி-எஸ் ஐ ஆர்*

புதுச்சேரியில், நிரப்பப்பட்ட எஸ்ஐஆர் படிவங்களை, வாக்காளர்களிடம் இருந்து சேகரிக்கும் பணிகளில் வாக்குச் சாவடி நிலை அதிகாரிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். தேவையான விவரங்களை முன்கூட்டியே சேகரித்து வைத்துக் கொண்டால் படிவத்தை பூர்த்தி செய்வதில் எந்த சிரமங்களும் இல்லை என்று, சஞ்சய்காந்தி நகரைச் சேர்ந்த வாக்காளர் ஒருவர் எமது செய்தியாளரிடம் கூறினார்.........

(வாய்ஸ்-ஜெகதீசன்)

*கைலாஷ்நாதன்*

புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் இன்று நடைபெற்ற மகாகவி பாரதியாரின் 144-ஆவது பிறந்த நாள் விழாவில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ-மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கி

சிறப்பித்தார். இந்தியா சுதந்திரம் அடையும் முன்பாகவே, அகண்ட பாரத்தை கனவு கண்டவர் மகாகவி பாரதியார் என்றும், ஒற்றுமை, விடுதலை, சமத்துவம், சகோதரத் துவம், பெண்கல்வி உட்பட இந்திய அரசியல் சாசனத்தின் எல்லா மாண்புகளையும் பாரதியார் பாடல்களில் காண முடியும் என்றும் அவர் கூறினார். கவிஞராக மட்டுமின்றி தலைமை பண்புக்கு முன் உதாரணமாகவும் திகழ்ந்த மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் துணிவும், தெளிவும், இன்றைய இளைஞர்களுக்கு முக்கியமாக தேவை என்று திரு கைலாஷ்நாதன் குறிப்பிட்டார். விழாவில், பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர் பிரகாஷ்பாபு, வானவில் பண்பாட்டு மையத்தின் நிறுவனர் திரு ரவி, புல முதல்வர் டாக்டர் சுடலைமுத்து, பேராசிரியர்கள். ஆய்வாளர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

*விஜய்*

த வெ க தலைவர் திரு விஜய் இன்று புதுச்சேரியில் கட்சி பொதுக் கூட்டத்தில் உரையாற்றினார். எம்ஜிஆர் தலைமையிலான அஇஅதிமுக, தமிழகத்திற்கு முன்பாகவே ஆட்சியைப் பிடித்த மாநிலம் புதுச்சேரி என்று அவர் கூறினார். புதுச்சேரி அரசு பலமுறை வலியுறுத்தியும் மத்திய அரசு இதுவரை புதுச்சேரிக்கு மாநில அந்தஸ்து வழங்கவில்லை என்றும், புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்கவில்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார். த வெ க பொதுக் கூட்டத்திற்கு புதுச்சேரி அரசு வழங்கிய பாதுகாப்பை அவர் பாராட்டினார்.

இன்று தமிழகத்தில ஓரிரு இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நாகை மாவட்டத்தில் ஓரிரு இடங்கள் மற்றும் காரைக்கால் பகுதியில் கனமழை பெய்யக் கூடும் என்றும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வரும் 15-ஆம் தேதி வரை லேசானது முதல் மிதமான மழை நீடிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் நெல்லை, குமரி, நாகை, விருதுநகர் மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் லேசான மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக தூத்துக்குடி மாவட்டம் கழுகு மலையில் 1 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

*கிரிக்கெட்-கோவில்*

இந்தியா-தென்னாப்பிரிக்கா அணிகளுக்கு இடையிலான முதலாவது 20 ஓவர் கிரிக்கெட் போட்டி, கட்டாக்கில் இன்று மாலை நடைபெற உள்ளது. இதை ஒட்டி, கேப்டன் சூரிய குமார் யாதவ், தலைமை பயிற்சியாளர் கவுதம் கம்பீர் உட்பட, இந்திய கிரிக்கெட் அணியின் 4 உறுப்பினர்கள் இன்று பூரி ஜெகந்நாதர் கோவிலுக்கு சென்று வழிபட்டனர்.

*புயல்-உதவி*

டித்வா புயலால் பாதிக்கப்பட்ட இலங்கை மக்களுக்கு, மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கான சாகர் பந்து நடவடிக்கைகளில், இந்திய ராணுவம் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. உதவி-மீட்பு பணியாளர்களுக்குத் தேவையான முக்கிய பொறியியல் உதவிகளும், பாதிக்கப்பட்டவர்களுக்கு உயர்தர மருந்துகளும், இலங்கை ராணுவம் மற்றும் அந்நாட்டு அரசின் ஒருங்கிணைப்புடன், தொடர்ந்து வழங்கப்பட்டு வருவதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது. யாழ்பாணத்தில் புயலால் சேதம் அடைந்த புளியம்போக்கணைப் பாலத்தை இந்தியா அனுப்பி உள்ள அகழ்வு இயந்திரத்தின் உதவியுடன் சீரமைக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருவதாகவும் வரும் 13-ஆம் தேதிக்குள் தற்காலிக மாற்றுப் பாலம் தயாராகக் கூடும் என்றும் தகவல் வெளியாகி உள்ளது.

*திருப்பதி-ரயில்*

திருப்பதி, ஷீர்டி சாய்நகர் இடையிலான புதிய எக்ஸ்பிரஸ் ரயிலை ரயில்வே துறை இணை அமைச்சர் திரு வி சோமண்ணா இன்று, புதுடெல்லியில் இருந்து மெய்நிகர் முறையில் தொடக்கி வைத்தார். ஆந்திர அமைச்சர் திரு ஜனார்தன் ரெட்டி, புதிய ரயிலை, திருப்பதி ரயில் நிலையத்தில் இருந்து கொடி அசைத்து அனுப்பி வைத்தார். தென்னகத்தின் 2 முக்கிய ஆன்மிக தலங்களுக்கு இடையிலான திருப்பதி-ஷீரடி எக்ஸ்பிரஸ் ரயில், பக்தி சுற்றுலாவை வலுப்படுத்துவதில் முக்கிய பங்களிக்கும் என்றும் அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

கலாச்சாரத்துடன் மக்களை ஒருங்கிணைப்பதே, கலைகள் தான் என்று குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார்.

நாட்டில், வலுவான **விமான போக்குவரத்துக் கட்டமைப்பு** ஒன்றை உருவாக்க அரசு உறுதி பூண்டுள்ளதாக, மத்திய சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் திரு ராம் மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் மொத்தம் உள்ள 51 கோடி வாக்காளர்களில், 99.97 சதவிகிதம் பேருக்கு **எஸ்ஐஆர் படிவங்கள்** வழங்கப்பட்டுள்ளதாக, தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் **துணிவும், தெளிவும்,** இன்றைய இளைஞர்களுக்கு முக்கியமாக தேவை என்று, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் கூறி உள்ளார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

------------------------